**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No.124-2019**

| | | |
|---|---|---|
| L.W.10 P.W.7 | | |
| Name: | தியாகராஜன் | Caste: |
| Father's Name: | பஞ்சு | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026

(எதிரிகள் ஆஜர்.)

**நீதிமன்ற விசாரணை:**

நான் 3 நாட்களுக்கு முன்னர் கையொப்பமிட்டு சம்மனை பெற்றுக் கொண்டேன். இதற்கு முன்பு நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல என்னை அழைத்திருந்தால் நான் வந்திருப்பேனா என்றால், நான் வந்திருப்பேன். இதற்கு முன்பு என்னை சாட்சி சொல்ல போலிசார் வர சொன்னார்களா என்றால், இல்லை.

**முன் விசாரணை:**

நான் தற்போது பொன்னாங்காட்டில் குடியிருந்து வண்டுறை மாரியம்மன் கோவில் மற்றும் மறைஞாயநல்லூரில் உள்ள முத்துமாரியம்மன் கோவிலில் பூசாரியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் சுப்பிரமணியன், வெள்ளை சட்டை அணிந்து நிற்கும் வாசு, ராஜசேகர், முத்துலெட்சுமி ஆகியோரைத் தெரியும். முத்துமாரியம்மன் கோவில் நிர்வாகியாக காத்தமுத்து இருந்தார். நான் உபயம் போன்ற வேலைகள் வந்தால், அதை மட்டும் செய்து கொடுப்பேன். நான் காத்தமுத்து கேட்டுக் கொண்டதற்கிணங்க முத்துமாரியம்மன் கோவிலில் யாருக்காவது திருமணம் செய்து வைத்தேனா என்றால், இல்லை. செல்வராஜ் என்பவரை தெரியுமா என்றால், தெரியாது. சாந்தி என்பவரை தெரியுமா என்றால், தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பில் விசாரணை</u>**

சாந்தியை எனக்கு எப்படித் தெரியும் என்றால், எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். தற்போது அவரை தெரியாது. சாந்தி தற்போது எங்கு இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. தற்போது எனது பக்கத்து வீட்டில் சாந்தியின் அம்மா இருக்கிறார். சாந்தி அவரது அம்மாவை பார்க்க அவ்வப்போது வருவாரா என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. சாந்திக்கு திருமணமாகிவிட்டதா என்றால், சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் திருமணம் நடந்தது. எந்த ஊரைச் சேர்ந்தவரை அவர் திருமணம் செய்து கொண்டார் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. சாந்தி வீடானது எங்கள் வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி உள்ளது. என்னை அவரது திருமணத்திற்கு அழைத்தார்களா என்றால், இல்லை. ஜோதி என்பவரை தெரியுமா என்றால், தெரியும். அவரது வீட்டு வழியாகத்தான் நான் கோவிலுக்கு செல்ல வேண்டும். ஜோதி என்பவர், என்னுடன் கோவில் பணிகளில் துணையாக இருப்பாரா என்றால், இல்லை.

கடந்த 10.02.2019 அன்று காத்தமுத்து என்னையும் ஜோதியையும் அழைத்து, 11.02.2019 அன்று சிதம்பரக் கவுண்டர் மகன் செல்வராஜ் என்பவருக்கு திருமணம் நடக்க உள்ளதாகவும், ஆலயத்தில் மண்டபத்தை முன் பணமாக ரூ.1000 செலுத்தி பதிவு செய்துள்ளார் என்றும், கோவிலை சுத்தம் செய்து, சக்கரைப்பொங்கல் செய்ய வேண்டும் என்று கூறினார் என்றும், மறுநாள் செல்வராஜ் சாந்தியை காரில் அழைத்து வந்தார் என்றும், செல்வராஜ் சாந்தியை தாலி கட்டி திருமணம் செய்து கொண்டார் என்றும், அப்போது சித்ரா என்பவர் ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டதற்கு செல்வராஜ், தகாத வார்த்தைகளால் பேசிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு சென்றுவிட்டார் என்றும், செல்வராஜிற்கு திருமணம் முடிந்து 3 குழந்தைகள் உள்ளனர் என்பதையும் சித்ராவின் மூலம் தெரிந்து கொண்டேன் என்றும், இது குறித்து போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது சாந்தி எனக்கு தெரிந்தவர் என்பதால், திருமணம் செய்து வைக்கவில்லை என்று உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 10.02.2026)**
**Vedaranyam(F.A.C.)**